# ஆத்மஜோதி



ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி மகராஜ்

சாதாரண ஹூ மாசி மீ 1ம்உ (16-2-71)



ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 23 - சாதாரண ஸ்ரீ - மாசி மீ 1ம் உ [16-2-71] -சுடர் -4

# பொருளடக்கம்


தவம் 81
தவயோகி 82
தவம் பெற்ற தவம் 83
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபால யோகி மஹராஜ் 88
இயற்கையே சோதிடம் 91
சமுதாய வாழ்வு 95
இந்து சமயமும் டார்வின் தத்துவமும் 98
முத்திற வழிபாடு 111


## ஆத்மஜோதி ஆயுள் சந்தா ஆதரவாளர்கள்

திருமதி. சிவானந்தம் தம்பையா அவர்கள் (கொழும்பு)
திரு. T. சிவப்பிரகாசம் அவர்கள் (மலேசியா)

## ஆத்மஜோதி சந்தா விபரம்



ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# ...வம்

தீமைசெய்யாமை, பொய்யாமை, நன்மை செய்தல், அருளுடைமை இவற்றையே சான்றோர் தவச் செயல்கள் என்பர். உடலை வருத்தும் நோன்புகளை யன்று.

—மகாபாரதம்.

★★

அறியவேண்டியதை அறிந்து செய்யவேண்டியதைச் செய்வதே தவமாகும். —காந்தி.

★★

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் வரும்.

—வள்ளுவர்.

★★

ஐவகைப் பொறியும் வாட்டி
ஆமையின் அடங்கி ஐந்தின்
மெய்வகை தெரியும் சிந்தை
விளக்கு நின்றெரிய விட்டுப்
பொய்கொலை களவுகாமம் அவா
இருள்புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக்
கனைகதிர்த் திங்கள் ஒப்பார்.

—சிந்தாமணி.

★★

எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தால்போல் கொடிதெனினும் — மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்து அடக்க லாற்றின்
பிறிதொன்று வேண்டா தவம்.

அறநெறிச்சாரம்.

★★

# தவயோகி

பகவத்கீதையின் ஆருவது அத்தியாயத்தில் ''ஆத்ம-சம்யம யோகம்'' என்ற யோக வாழ்க்கையை நடத்திய முனிவரைப் பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய சுய முயற்சியாலேயே தன்னை வளப்படுத்திக் கொண்டு மன திடத்துடன் சந்நியாசியாக மாறி எல்லோரிடத்தி லும் ஒரேவிதமான அன்பு செலுத்தி, ஏகாங்கியாய்த் திட சித்தம் உடையவனுய், உலக வாழ்க்கையில் பற்றற்றவனுய் முற்றுந்துறந்த தவவாழ்க்கையை நடத்தும் யோகியைக் குறிக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கூறியுள்ளபடி நிர்மலமான மனதுடன் யோகத்தை மேற்கொண்டவனுக்கு பிரம்ம சம் யோகம் கிடைக்கும். கீதையில் இவர்களை பிரம்மா, சிவன் ருத்திரன் என வர்ணிக்கிறது.

மனதை ஆத்மாவில் சதா நிலைக்கச் செய்து பாபம் நீங் கப் பெற்ற யோகியானவன் பிரம்ம ஞானத்தில் பிறக்கும் பேரானந்தத்தை எளிதில் எய்துகிருன்.

யோகத்தில் உறுதிபெற்று எங்கும் சமதிருஷ்டி உடைய வன் தன்னை எல்லா உ்யிர்களிடத்தும் எல்லா உயிர்களைத் தன்னிடத்தும் இருப்பதாகக் காண்கிருன்.

யார் இறைவனை எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் இறைவனிடத்திலும் காண்கிருனே அவன் காட்சியினின்று இறைவன் மறைவதில்லை; அவனும் இறைவன் காட்சியி னின்றும் மறைவதில்லை.

★★

### ஒருமை பன்மை

அறிவு ஒற்றுமைக்கு இட்டுச் செல்லுகிறது. ஆனுல் அறி வின்மை வேற்றுமைக்கு இட்டுச்செல்லுகிறது.

# தவம் பெற்ற தவம்

- ஆசிரியர் -

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் தவத்திற்கு உரு என்று, வள்ளுவர் தவத்திற்கு உருவம் கொடுத்தார். இன்று மானிட உருவில் தவத்தைப்பார்க்கும் ஒருவாய்ப்பு நமக்கெல்லாம் கிட்டியுள்ளது. அத்திருவுருவம்தான் ஸ்ரீ சிவபால யோகியார்.

ஆந்திர தேசத்தில் கோதாவரி ஜில்லாவில் நெசவுத் தொழில் செய்யும் ஏழைக் குடும்பத்தில் தோன்றிய யோகியார் இளமையில் சத்தியராசு என்ற பெயர் படைத்திருந்தார். பெயருக்கேற்ப வாழ்க்கை முழுவதும் நேர்மையையும் சத்தியத்தையும் கடைப்பிடித்தார். சத்தியராசு அதிகாலையில் எழுந்து பத்து மணி வரை வீட்டிலுள்ள பெரியார்களுக்கு நெசவுத் தொழிலில் உதவி செய்வார். பின் பாடசாலை சென்று ஐந்து மணிக்கு வீடு வந்து ஆறு மணி வரை பெற்றோருக்கு உதவி செய்வார். இரவு ஒன்பது மணி வரை விளையாடுவார். விளையாட்டு முடிந்து வந்ததும் பாட்டனாரிடம் தமது அன்றாட நிகழ்ச்சிகளை ஒப்புவிப்பார். பாட்டனாரின் உபதேசம் பின்வருமாறு:—

''வறுமை கொடுமையானது தான்; துரதிர்ஷ்டமானதுதான். ஆனால் அது பாவம் அல்ல. அதைக்கண்டு வெட்கப்படவேண்டியதில்லை. தன்மானம் நிறைந்த மனிதன் மற்றவரிடம் பிச்சை ஏற்கமாட்டான். பிறரிடம் கடன் படாமல் கௌரவமாகவே வாழ முயல்வான். நேர்மையான வழிகடினமானதுதான். இதுவே ஏற்ற வழி. பொய்மையும் கபடமும் தீங்குவிளைக்கும்.''

பாட்டனாரின் இப்புத்திமதிகள் சத்தியராசுவுக்கு வாழ் நாள் முழுவதும் ஊன்றுகோல்போல் உதவின. ஒருநாள்

சத்தியராசு குளித்துவிட்டுவரும்போது பனம்பழம் ஒன்று கீழே விழுந்தது. கூடவந்த கங்கராசுவின் சொற்படி அப் பனம் பழத்தை சத்தியராசு கடித்தான். உடனே உடம் பெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. ஓங்காரநாதத்துடனும் ஒளியுடனும் ஓர் உருவம் திடீரெனத் தோன்றியது. பழம் உடனே மறைந்துவிட்டது. அவ்வுருவம் சத்தியராசுவை பத்மாசனத்தில் இருக்கச் செய்து, அவனுடைய நெற்றியில் தன்னுடைய நடுவிரலால் தொட்டு தலையில் மெதுவாகத் தட்டியது. சத்தியராசுவுக்குச் சுயநினைவற்றநிலையாகி விட்டது.

சிறுவர்கள் ஓடிச்சென்று ஊரிலுள்ளவர்களை அழைத்து வந்தனர். தேவனுடைய கைப்பட்ட இடத்தில் பிரம்படி விழுந்ததும் துடிதுடித்து எழுந்துநின்றூர். வந்தவர்களிடம் ஒரு துண்டு வாங்கிக் கௌபீனம் அணிந்துகொண்டு உடைகளைக் கழற்றி எறிந்தார். வீடு சென்றும் வீட்டினுள்ளே தங்க மறுத்துவிட்டார். வெளித்திண்ணையிலேயே தங்கினூர்.

இரவு பதினொரு மணி இருக்கும். மறுபடியும் ஓங்கார நாதம் கேட்டது. ஆற்றங்கரை நோக்கி ஓடினூர். அங்கு நிஷ்டையில் அமர்ந்தார். இரவு 2 மணிக்கு ஆரம்பித்த மழை மறுநாள் மத்தியானம் வரை இடைவிடாது பொழிந்தது. சத்தியராசு மழையில் நனைந்தபடியே சுயநினைவற்று இருப்பதைக் கண்டனர். பக்கத்திலுள்ள அரச மரத்தின் கீழ் கொண்டுவந்து இருத்தினர். 4, 5 ஓலைகளால் பந்தல் ஒன்று அமைத்தனர். யோகியாரைப் பார்க்க கிராம மக்கள் பெருந் தொகையாக வந்தனர். அவர்கள் வரும்போது ஓங்கார நாதம் ஒலித்தது. ஒருமணி நேரம் இடைவிடாது ஒலித்தது. வந்தவர்கள் பயந்து திரும்பிவிட்டனர். யோகியாரை நெருங்கவும் அஞ்சினர்.

ஊர்மக்களும் அயலூர் மக்களும் அவரைத் தரிசிக்க ஆயிரக்கணக்கில் திரண்டனர். ஆனல் கிட்டச் செல்ல அஞ்

சினர். அவருடைய நண்பனுன கோவிந்தன் மாத்திரம் அஞ்சாது அவருக்குப் பக்கத்திலே இருந்தான். ஊர்மக்கள் பாலயோகி என அழைக்கத் தொடங்கினர். யோகியார் கண் விழிக்காது ஆழ்ந்த நிஷ்டையிலேயே இருந்தார். தாயார் யோகியாரை வீட்டிற்கு வருமாறு அழைத்தார். அவர் மறுத்துவிட்டார். அதனுல் தாயாரும் அங்கேயே தங்கிவிட்டார். தாயாரின் வற்புறுத்தலால் பால்மாத்திரம் சாப்பிடச் சம்மதித்தார்.

அந்த ஊரில் கோரமல்லண்ணன் என்பவர் ஒருவர் இருந்தார். பெயருக்கேற்ப குணத்தில் கோரமானவராகவே விளங்கினுர். தான் யோகியாரைப் பாதுகாத்து அவருடன் இருக்கப்போவதாகக் கூறி ஊரார் கொண்டுவரும் பால் பழம் அத்தனையையும் தாமே ஏப்பம் விட்டு யோகியாருக்கு ஒன்றும் கொடுக்காது, அவருடைய தவத்திற்கும் இடையூறு விளைத்து வந்தான். இவனது செயலைக்கண்ட தாயார் மனம் மிக வருந்தினுர். யோகியாரோ எல்லாத் துன்பங்களையும் பொறுத்து தவத்திலேயே கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டார்.

பாலயோகியின் தவத்தை இருவர் பரிசோதிக்க விரும்பினர். பத்மாசனத்தில் இருந்த யோகியாரின் கால்களை வலோற்காரமாகப் பிரித்தார்கள். கால்கள் தாமாகவே வந்து பத்மாசன நிலையை அடைந்தன. கண்களைத் திறக்கச் செய்வதற்கு எத்தனையோ வழிவகைகளைக் கையாண்டும் கண்களைத் திறக்கச் செய்ய அவர்களால் முடியவில்லை. இருவரும் உள்ளம்மாறி யோகியாரின் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்பு வேண்டினர். யோகியார் புன்முறுவல் பூத்தார்.

இருவரும் தாயாரிடம் சென்று உங்கள் மகன் பெரிய யோகியாகிவிட்டார். அவருக்குப் பக்கத்திலேயே நீங்கள் எப்போதும் இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். இந்த இடத்தில் தொந்தரவுகள் கூடிக்கொண்டே வந்தனவாகையால் ஐந்துமைல் தூரத்தில்உள்ள பசலபுடி என்ற

கிராமத்தில் இருக்கும் ஆச்சிரமம் ஒன்றில் தங்கித்தவத்தை மேற்கொண்டார். ஆனால் ஆச்சிரம வாசிகளிற் சிலருக்கு யோகியாரைப் பிடிக்கவில்லை. அதனால் மறுபடியும் முன்னிருந்த அரசமரத்தடியிலேயே தங்கித் தவத்தை மேற்கொண்டார்.

ஒருநாள் இரவு இரண்டுமணி சுமாருக்கு கடும் புயலுடன் பேய்மழை பெய்யத் தொடங்கி அந்த ஊரையே அல்லோல கல்லோலப்படுத்தியது. மரங்கள் எல்லாம் முறிந்து வேர்பாறின. வீடுவாசல்கள் அழிந்தன. பல மக்கள் இருக்க இடமின்றித் தவித்தனர். அன்று மத்தியானம் தாயார் மைந்தனின் கதியாதாயிற்றோ என்று அறிய ஓடோடியும் வந்தார். அந்த அரச மரத்திலிருந்து ஒரு இலை தானும் அசையவில்லை. ஏதும் நிகழாதது போன்று அந்த இடம் சாந்தமாயிருந்தது. மைந்தனின் உடலில் செவ்வெறும்புகள் மாத்திரம் மொய்த்திருக்கக் கண்டார். எறும்புகளைத் தாயார் அகற்ற முற்பட்டபோது யோகியார் அதனைத் தடுத்து தவத்தை மேற்கொள்ளத் தொடங்கினார்.

அரச மரத்தடியில் போக்கிரிச் சிறுவர்களின் துன்பம் தாங்கமாட்டாது ஊருக்குப் புறத்தே உள்ள சுடுகாட்டில் தவத்தை மேற்கொண்டார். பயத்தினால் சுடுகாட்டுக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் எலி, பூச்சி பூரான் ஆகியவைகள் அவர் உடலைக் கடித்துத் தின்னத் தொடங்கின. இரவில் கால்வாய்க்குக் குளிக்கச் சென்று திரும்புவார். ஒருநாள் குளிக்கச் செல்லும் போது கொடிய விஷப்பாம்பு ஒன்று தீண்டிவிட்டது. உடம்பெல்லாம் விஷம் பரவி நீல நிறம் அடைந்தது. நாட்செல்ல உடம்பில் எரிச்சலும் புண்களில் நாற்றமும் எடுத்தன.

இப்படிக் கஷ்டப்பட்டுத் தவம் செய்வதிலும் பார்க்க வீட்டுக்குத் திரும்பி எல்லோரையும் போல வாழலாமா என்று எண்ணினார். அவர் தவம் செய்வதும் விடுவதும் அவரது சுயாதீனத்தில் இருக்கவில்லை. உள்ளம் தளர்வடைந்த சமயத்தில் மறுபடியும் சோதிபுருஷன் தோன்

றித் தவத்தை ஊக்கினர். மனம் சாந்தியடைந்து முன் போலவே தவத்தை மேற்கொண்டார். இப்பொழுது தவத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டுச் சோதி புருஷனின் மந்திரோபதேசம் யோகியாருக்குக் கிடைத்தது. மந்திரோபதேசத்தினல் உடல் வேதனை எல்லாம் நீங்கின.

பன்னிரண்டு ஆண்டுகள் இடைவிடாமல் செய்யும் தவத்திற்கு ''யுகதவம்'' என்று பெயர். யோக சாஸ்திரத்தில் 12 ஆண்டு காலத்தை ஒரு யுகம் அல்லது ஒரு பருவம் என்று கூறுவர். இந்த யுக தவத்தின் காலத்தில் கிரமமாக நான்கு திசைகளிலும் திரும்பி தவமார்க்கத்தை அனுசரித்து தவம் செய்ய வேண்டும். ஒவ்வொரு திசைகளிலும் அமர்ந்து தவத்தை வெற்றிகரமாக முடித்தால் அதற்குத் திசை சித்தி என்று பெயர். ஒவ்வொரு திசையிலும் திரும்பித் தவம் செய்யும் போது அந்தத் திசைக்குச் சரியான மந்திரங்களையே உச்சரிக்கவேண்டும். திசை சித்திகளைப் பெற்று யுக தவத்தை முடித்தவரை ரிஷி அல்லது முனிவர் என்று அழைப்பார்கள்.

இத்தகைய தவசித்தி பெற்ற ஸ்ரீ சிவபாலயோகியார் இம்மாதத்தில் ஈழம் வருவது பற்றி ஆத்மஜோதி நிலையம் பெருமகிழ்வு கொள்கின்றது. தவசித்தி பெற்றவரைத் தரிசிப்பதால் எமது வினைப்பயன் குறைந்து நாமும் புனிதர்கள் ஆகின்றோம். யோகியாரின் இவ்வருகையைப் பயன்படுத்தி அவரது தரிசனத்தைப் பெற்று அவரது ஆசியைப் பெறுவோமாக!

**

## உள்ளும் புறமும்

தண்ணீரிலே வைக்கப்பட்ட ஒரு குடுவையில் உள்ளும் புறம்பும் தண்ணீர் நிறைந்திருக்கிறது. இவ்விதமாக இறைவன் அருளில் அமிழ்ந்துள்ள ஆத்மா உள்ளும் புறம்பும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள மெய்ப்பொருளையே பார்க்கிறது.

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபாலயோகி மஹராஜ்

ஆர். கே. முருகேசு

இந்த இருபதாம் நூற்றுண்டில், பாரதத் திருநாட்டில் ஆந்திரபிரதேசத்தில், 1949 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7ம் திகதி சத்யராஜு என்ற 12 வயது ஏழைச் சிறுவன் தன் சிநேகிதர்களுடன், கோதாவரி நதியில் குளித்து விட்டு ஒரு பனந்தோப்பு வழியாக வீடு திரும்பும் சமயம், ஒரு பனைமரத்திலிருந்து சில பழங்கள் கீழே விழ, அவைகளை எல்லோரும் பொறுக்கி சாப்பிட்டார்கள். சத்யராஜு தனக்குக் கிடைத்த பழத்தை சாப்பிட வாயில் வைத்ததும், பழத்தினுள் ஓம்காரம் போன்ற சத்தம் கேட்க, பையன் திடுக்கிட்டான், சிறிது நேரத்தில் பனம்பழம் ஒரு சிவலிங்கவடிவமாகி இரண்டாக வெடித்து அவன் முன் 7 அடி உயரமுள்ள ஒரு உருவம் தோன்றி சத்யராஜுவை பத்மாசனத்திலமர்ந்து தியானம் செய்யுமாறு பணித்து தன் விரலை சத்யராஜுவின்நெற்றியில் தொட, சத்யராஜு தன்னிலையிழந்து அன்றுமுதல் 12 வருடங்கள் கடுந்தவம் செய்து மாபெரும் தவ ஆற்றலைப்பெற்று தான் பெற்ற இன்பத்தை மண்ணுலக மக்களும் பெற்று பேரானந்த பெருவாழ்வு வாழ வேண்டுமாய் பாரத நாட்டில், பல்லாயிரக்கணக்கான மைல்கள் யாத்திரை செய்து பலலட்சம் மக்களுக்கு தியான தீட்ஷை கொடுத்து ஒவ்வொருவரும் தன்னுள் உறையும் உயராத்ம சக்தியை கண்டானந்தம் பெற வழிகாட்டி வருகிறுர். இவரே ஸ்ரீ சிவபால யோகி மகராஜ் அவர்கள்.

இந்த மகாதபஸ்வியை சென்ற மாதம் எதிர்பாராமல் சென்னையில் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டி, இவரின் உத்தரவுப்படி, இவரோடு பெங்களூரில் உள்ள இவரின் ஆஸ்ரமம் சென்று இவர் முன் அமர்ந்து தியானம் செய்து, தியான தீக்ஷை பெறும் மஹா பாக்கியத்தைப் பெற்று, இலங்கை மக்களும் இப்பாக்கியத்தை பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இவரை இலங்கைக்கு எழுந்தருளும்படி கோரிய என்

அழைப்பைஏற்று இம்மாதம் 15 ம் திகதி தன் தாயாருடன், இலங்கைக்கு எழுந்தருளுகிறார்.

இறையருள் பெற்றுய்ய விரும்பும் அருள்தாகம் கொண்ட, இலங்கைவாழ் ஆன்ம கோடிகள் நிறைஞானியாகிய இந்த யோகபுருஷரை தரிசித்து அவர் ஆசிபெற்று பாபங்களை யெல்லாம் போக்கி, மலங்களையறுத்துச் சுத்தமாக்கி, வேற்றுமைகளைக் களைத்தெறிந்து நித்தியானந்தம் பெறுவதற்கான ஞானத்தைப் பெற்றுய்வார்களாக.

பணம் வேண்டியவனுக்கு, பணத்தைப்பற்றி விளக்கம் கொடுத்தால் போதாது, பணத்தையே கொடுத்துதவ வேண்டும். அவன் அதை ஒன்றை நூறுக்கி பணக்காரனுகி விட முடியும். கல்வி வேண்டியவனுக்கு கல்வியின் சிறப்பைப் பற்றி உபதேசம் செய்தால் போதாது, கல்வியைக் கற்றுத் தரவேண்டும். நோயாளிக்கு மருந்தைப்பற்றி வர்ணித்தால் பயனில்லை, மருந்தையே கொடுக்க வேண்டும். உடல் மெலிந்தவனுக்கு சத்துணவுப் பட்டியல், பயன்தராது, உணவே தேவை. தள்ளாடுபவனுக்கு 'தடியை வைத்துக்கொள்' என்று சொல்வதுமட்டும் போதாது, ஓர் தடியையே கொடுத்துதவ வேண்டும். இதே போல், இறையருள் தேவைப்பட்டு, அவன் பாதத் திருவடிகளைப்பற்றி, அவனில் லயமாகி, பேரின்பானுபவத்தை பெற விரும்புபவனுக்கு, விரதமிருந்து, கங்கையில் ஸ்நானம் செய்து, விளக்கேற்றி, தூப தீபங்கள் காட்டி, மந்திரங்கள் ஜபித்து, வழிபட்டுவா, என்று சொன்னுல் மட்டும் போதாது, இறைவனைக்காட்டி அவனேடு இரண்டறக் கலக்கச் செய்து, நான் அவனுய் இருக்கிறேன் என்ற நிலையைப் பெறச்செய்ய வேண்டும். ஆண்டவனைக்காண அருள் தாகம் கொண்டலைந்த சுவாமி விவேகானந்தரின் நெஞ்சில் கையைவைத்து, இருதயக்குகைக்குள் பிரகாசிக்கும் ஈஸ்வரஜோதியை காணச்செய்தார் பகவான் இராமகிருஷ்ணர். அதே போல சிவனிடத்தில் தீக்ஷை பெற்று, சிவானந்தமாம் பேரின்பத்தை அனுபவித்து வரும் இந்த சிவயோகி, சிவபாலன், தன்னை சரணடைந்த

பக்தர்களின் புருவமத்தியில் விரலை வைத்து, உலகத்தை ஆளும் அந்த தேவனின் ஒளிமயக் காட்சியை தன் உள்ளே கண்டானந்தம் பெறச்செய்கிறார். இது என் அனுபவ உண்மை.

தன்னை தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான மக்களை தன்முன் அமர்த்தி தியானத்தில் ஈடுபடுத்தி, தன் அருள் சக்தியை அவர்களில் பாய்ச்சி, ஆன்ம தீக்ஷை கொடுத்து ஆசீர்வதித்து, ஜபசக்தி ஏற்றிய விபூதி பிரசாதம் வழங்குகிறார். இதைபெற்ற மக்கள், மலைபோல் துன்பங்கள் பனிபோல் கரைந்து பரவசப்படுகிறார்கள். வாழ்வில் சஞ்சலம் நீங்கி சாந்தி நிலவுவதைக் கண்டானந்தமடைகிறார்கள்.

கவலையில்லாமல் நிம்மதியாய் வாழ்ந்து, தன் பிறவிப் பயனைப் பெற்றுய்ய வழி இல்லையா, அறியாமற் செய்த பாபங்களின் பயனாய் வந்திருக்கும் துன்பச் சூழல்களிலிருந்து மீளமுடியாத, செல்வம், பலம், ஆரோக்கியம், அதிகாரம், கல்வி, ஜனக்கட்டு முதலான எந்த உலக உடமைகளாலும் போக்கிக் கொள்ள முடியாத துன்பங்களிலிருந்து தப்ப வழியே இல்லையா என்று கவலைப்படும் மக்கள், பூரண விசுவாசத்துடன், திட நம்பிக்கையுடன், யோகத்தின் எல்லை கண்ட அருந்தவ ஞானியாம் சிவபாலயோகியை சரணடைந்து அமைதி நிறைந்த அருள்வாழ்வைப் பெறுவார்களாக.

## இறைவன் எங்கே?

இறைவன் வெளியே வெகுதூரத்தில் இருப்பதாகத் தோன்றும் வரையில், அறியாமை இருக்கிறது. ஆனால் இறைவன் உள்ளே அநுபூதியில் அறியப்பட்டு விட்டால் அதுவே உண்மை அறிவாகும்.

# இயற்கையே சோதிடம்

(ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை)

## பாடம்: 11 லாபம் சுதர்மம்

சோதிடத்தில் 11ம் இடம் லாபஸ்தானம். ஏகதசத்தில் எக்கோளும் நன்று. ஏகாதசி 11வது திதி. இது ஓர் முக்கிய மான விரதநாளாகும். பொதுவாக 11ம் வீட்டதிபன் எங்கிருந்தாலும், அந்த அந்த ஆதிபத்தியத்தின்படி அவரவர்களால் லாபம் வரும். 11ம் வீட்டதிபன், 6, 8, 12ம் வீடுகள், மறைவு ஸ்தானங்களிலிருந்தால், லாபத்திற்குப் பதில் நட்டமே கிடைக்கும். இருந்தும் இக்கிரகத்தை ஓர் சுபக்கிரகமோ அல்லது ஒன்பதாம் வீட்டதிபனே பார்த்தால் சொற்பலாபமுண்டு. 2, 4, 7, 9ம் வீட்டதிபர்கள் கூடிப் 11லிருந்தால் லட்சாதிபதியாவார்கள். இரண்டாம் வீட்டதிபன் 11லும் 9, 11ம் வீட்டதிபர்கள் கூடி இரண்டிலுமிருக்க இவர்களுக்குக் கேந்திரமான, 1, 4, 7, 10ம் இடங்களில் சந்திரனிருந்தால் கோடீஸ்வரனுவார்கள். 11ம் வீட்டதிபன் 4ம் வீட்டிலிருந்தால் வாகனம் வீடு தாயாதிகளினுல் லாபம் பெறுவார்கள். 7 ஆமிடத்தில் லாபாதிபனிருந்தால் கல்யாணத்தினுல் லாபமுண்டு. லாபாதிபன் 10லிருந்தால் தொழில் லாபமுண்டு. லாபாதிபன் 12லிருந்தால் விரயம் மோட்ஷமுண்டு. லாபாதிபன் 9 லிருந்தால் சுதர்மமுண்டு. பல பிறவிகளின் மூலமாகச் சுதர்மம் வளர்ந்து வளர்ந்து அறவழி நடப்பவர்களாவார்கள். இது ஆக்கையின் லாபம். ஆன்ம லாபத்திற்கு வருவோம்.

பாருங்கள் கீதையில் 11ம் அத்தியாயம் விஸ்வரூப தரிசனம். அருச்சுனன் பகவானுக்கு மிகவும் பிரியன், எவ்வளவு பிரியனென்றுல்—பத்தாம் அத்தியாயத் (விபூதி சிந்தனை) தில் எந்தெந்த உருவில் தம்மைச் சிந்திக்கவேண்டுமென்று வரிசையாகச் சொல்லிக்கொண்டு வந்த பகவான்; பாண்டவர்க

ளுள் அருச்சுனன் உருவில் தானிருப்பதாகச் சிந்தனைசெய் என்கிறார். பாண்டவர்களுள் தான் தனஞ்செயன் என்கின்றார் ஸ்ரீ கிருஷ்ணன்! இதைவிட அதிகமான அன்புப் பித்தம், எங்கே யுண்டு? அன்பு எவ்வளவு பித்தம் உண்டு பண்ணும் என்பதற்கு, இது உதாரணம். அருச்சுனன் மீது பகவானுக்கு அளவற்ற அன்பு. இப்பதினோராம் அத்தியாயம், அவ்வன்பின் பிரசாதமே. தெய்வ உருவைக்காண வேண்டுமென்ற அருச்சுனனது ஆவலை, பகவான் அவனுக்குத் தெய்வபார்வையைக் கொடுத்துத் தமது (விராட்ரூபத்தை) விஸ்வரூப தரிசனத்தைப் பூர்த்தி செய்தார்; அருச்சுனனுக்கு அன்பின் பிரசாதம் அளித்தார், என்பதேயாகும். (விஸ்வரூப தரிசன விளக்கம் 6ம் பாடத்தில் வந்தது.) இப் பெருத்த சிருஷ்டியில் வியாபித்துள்ள ஆண்டவனே பூரணமாய் ஒரு சிறிய விக்கிரகத்திலும் ஒரு சிறு மண் திவலையிலும் வியாபித்திருக்கிறானே யல்லாது, எவ்வகையிலும் குறைவாயல்ல. அமுதக் கடலில் இனிப்பு அமுதத் துளியிலும் இருப்பதோடு புஷ்டியும் அதே அளவிலிருக்கும். அமுதம் ஒரு துளி அருந்திய போதிலும் நமக்குச் சாகாவரம் கிடைத்து விடுகிறது. அவ்வாறே ஆண்டவனின் விராட் ரூபத்தில் உள்ள அதே அளவு தெய்வத்தன்மையும் புனிதமும் ஒரு சிறிய உருவிலும் இருக்கின்றன என்பதை வாசக நேயர்கள் நெஞ்சில் பதிய வைத்தல் அவசியமாகும்.

**மார்கழிமாத மகத்துவம்:-** மார்கழிமாதம் திருவாதிரை நட்சத்திரம் எப்போ வரப்போகிறதையோ என்று பக்த நந்தனார் வேண்டி அழுதார்.

சாதாரண வருஷம் மார்கழிமாதம் 26ந் திகதி (10-1-71) ஞாயிற்றுக்கிழமை உதயம் நடேசர் ஆர்திராதரிசனம். திருவாதிரை பூரணைகாலத்தில் திருத்தில்லை நடராஜப்பெருமான், கனகசபையிலே திருநடனமாடினார் என்றால் அவரது வலது திருவடி கிழக்கே தனுராசி பூராடநட்சத்திரத்திலும் (சூரியனுடன்) அவரது திருமுடி மேற்கே மிதுன ராசியில் (பூமி) சந்திரனுடன் திருவாதிரை நட்சத்

திரத்திலும் அவரது வலது திருக்கரம் மீனராசியில் உத்த ரட்டாதி நட்சத்திரத்திலும், அவரது இடக்கரம் கன்னிராசி யில் அத்த நட்சத்திரத்திலுமாகக் காண்பதோடு, (பூரா டம்; வருணன் கங்கை; பரணி; துர்க்கை ஞானசக்தி, பூரம்; பராசக்தி, கிரியாசக்தியாகவும்) காண்பதோடு பூமி முத லான அண்டசராசரங்களனைத்து முடலாக நின்று கனக சபையிலே நடராஜமூர்த்தியாயும் அம்மையப்பனாகவும் நின்று சகல அடியார்களும் காணத் திருநடனமாடும், இவ் வேளையில் நாமிருக்கும் பூமாதேவியானவள் பன்னிரு ராசி களின் வர்ணப் பாவாடையுடன் நிலாக்குடை புடைசூழத் தந்தையாகிய சூரியபகவானை பரதநாட்டியப் பவனி வருங் காட்சியை நட்சத்திரங்களும், கிரகாதிபர்களும், தேவுக் களும் பூலோகவாசிகளும், பாதாளவாசிகளுங் கண்டுளங் களிப்பார்களாக! இத்திருநடனம் சூரியன், பூமி, சந்திரன் பூரணை யாகுங்காலங்களில் விசேஷமாக இயற்கைத் தத் துவமாக நடந்து வருகிறது.

சிவசிதம்பரம் ஞானசபை நடராஜ மன்றம். சிவகாமிக் கழகம், ஞானசபை பரம்பொருள், எல்லாவற்றையுங் கடந்த வெளியாய், சூனியமாய் இருப்பதை அறிவிப்பது ஞானசபைப் பரம், சிவகாமி இயற்கையுடன் கலந்த தோற் றம் ஒரு பெரும் அசைவை இயக்கத்தை கூத்தை உணர்ந்து வதே, நடராஜமன்றம், நடராஜ ஓவியம் இயக்கத்திற்கு அறிகுறி சிதம்பரம் ஓர் ஓவியக்கூடமாக ஓர் இடத்தில் நிற்கிறது. அஃது அண்டசராசரங்களின் தத்துவங்களை அடக்கி ஓர் ஓவியப்பள்ளியாய்த்திகழ்கிறது. நேயர்களே சிதம்பரத்தைச் சிந்தியுங்கள் எது சிதம்பரம்? தென்னார்க் காட்டிலுள்ள புலியூரிலிருக்கும் கட்டிடமா சிதம்பரம்? அன்று அண்டசராசரங்களின் ஓர் ஓவியம்தான் சிவசிதம் பரம்.

**அம்பலமாவ தகில சராசரம்**
**அம்பலமாவது ஆதிப்பிரானடி**
**அம்பலமாவது அப்புத்தீ மண்டலம்**
**அம்பலமாவது அஞ்செழுத் தாமே.**

ஒன்பதுமாட ஒருபதினறுட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடனுட
இன்புறு மேழினும் ஏழைம்பத்தாருட
அன்புறு மாடினன் ஆனந்தக்கூத்தன்றே.

திருமூலர் திருநடனத்தைப் பத்துப் பாடலில் விசேஷ மாகப் பாடியதில் இருபாக்கள் மட்டுமே, இவை.

---

## பாம்புச் சட்டை

பாம்பானது அதன் சட்டையினின்றும் வேருயிருப்பது போன்று, ஆத்மாவும் உடலிலிருந்து வேருயிருக்கிறது.

---

## சலனம்

ஞானியினுடைய இதயத்திலே ஓடிக்கொண்டிருக்கும் ஞானமாகிய கங்கை ஒரேபக்கமாகத்தான் ஓடுகிறது. ஞானிக்கு உலகம் முழுவதும் கனவேயாகும். அவன் தன்னுடைய ஆத்மாவிலேயே எப்பொழுதும் உறைகின்ருன். ஆனல், பக்தனின் இதயத்திலே உள்ள பக்தி என்னும் கங்கை எப்பொழுதும் ஒரேவழியில் ஓடுவதில்லை. அதற்கு ஏற்றமும் இறக்கமும் உண்டு. பக்தன் சிரிக்கின்ருன் அழுகின்ருன்; ஆடுகின்ருன்; பாடுகின்ருன். அவன் அன்புப்பொருளைத் துய்க்க அப்பொருளோடு கலந்து கொள்ள விரும்புகிருன். அவன் இறைமையில் நீந்துகின்ருன். சிலசமயங்களிலே மூழ்குகின்ருன். சிலசமயங்களிலே மேலே கிளம்புகின்ருன். தண்ணீரில் ஒரு பனிக்கட்டி போல.

—ஸ்ரீ இராமகிருஷ்ணர்

# சமுதாய வாழ்வு

- சிவ. கிருஷ்ணம்மாள் -

குடியாட்சி நாளில் குடிமக்கள் ஒவ்வொருவரும் குடிமையின் உயர்வு தோன்ற நடந்தால்தான் ஆட்சி செம்மையும் சிறப்புமாய் அமையும். நாட்டின் உயர்வு போலவே சமுதாயத்தின் உயர்வும் தனிமனிதர்களுடைய தகைமைகளெல்லாம் சார்ந்ததே-சேர்ந்ததே யாகும். சமுதாயக் கேடு ஊழல் என்று சொன்னுல் அது தனிமனிதரின் செப்பமில்லாத் தன்மையையே குறிக்கும்.

சமுதாயம் என்பது இவ்வுலகில் வாழும் மக்கள் திருக்கூட்டமே. அப்பாற்பட்ட ஒன்றல்ல. வாழும் மக்கள் வாழ்வாங்கு வாழுங்கால் சீர்கெட்ட சமுதாயம் உருவாக இடமில்லை. செப்பமும் நாணும் ஒருங்கமைந்த உயர்பிறப்புச் சமுதாயம் அச்சமின்றி, ஈகையுடன், அறிவின் ஒளியில், முயற்சியால் எழுச்சியுற்று பண்பொடு வாழும் என்பதை ஐயமின்றிச் சொல்வேன். பண்பு என்பதிலேயே ஒற்றுமை என்றும் பலமாயுள்ளது புலப்படும்.

தன்னலம் ஒதுக்கிப் பொதுநலம்பேணும் சமுதாயமே தளிர்த்து வாழப் பயிற்றுவித்தல் நலமாம். இடைக்காலப் புரட்சி அருட்கவிஞர் வள்ளலாரும் - சாதி சமய சழக்கை விட்டு அருட்சோதியைக் கண்டதாகவும், கண்ட பெருநிலையை விளக்கி மக்கள் அவ்வழியிலே வாழத் துள்ளலை விட்டுத் துடங்கினுல் உண்மை வழியில் நன்மை பெறலாமென வும் கூறியுள்ளார். நாடு வாழக் கேடு ஒன்றுமில்லை, நாடு வாழ நாமும் வாழ்வோம் என்பவைகளை யெல்லாம் மறுமலர்ச்சித் தமிழில் மாணிக்கவாசகரின் அருள்வழியே, கருத்துக்களை உருத்தாய் தெவிட்டாத தேனமுதாய் அள்ளித் தந்தார் வள்ளலார் பெருமான். அறிவாரில்லை. சிலர் அறிந்தாலும், உணர்ந்தாலும் இடைச் சூழல்கள் சில வலி

மை கொண்டு சமுதாயம் உயர்நிலை பெறுமாறு விடாது பலப்பல இன்னல்களை அடுக்கித் தந்து உயர்வினை அடக்கி ஒடுக்கி விட்டதை எண்ணிடில் என்னிதயம் கொதித் தெழும் வேகத்தில் தானே அடங்கி தனி மனித உயிர் மாழ் வதுபோல் ஓர் உணர்வு. சிந்திக்க வேண்டும், செயல்பட வேண்டும், செயல்படுத்தவேண்டும்.

மாய்வது அரை நொடியில் வாழ்வது நெடுங்காலம். வாழும் உயிர் வாழ்கின்ற உயிர்களுக்கு உதவவும் - வாழப் போகும் உயிர்களுக்கு வழிவகைகளுடன் அமைப்புக்களைச் சீருடன் செய்து முடிப்பதும் ஆகும். இதுவே குடிமையின் முக்கியக் கடமையாகும்.

உண்டாலம்மா இவ்வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியருண் டலுமிலர், முனிவிலர்
துஞ்சலு மிலர், பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் - பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் - அயர்விலர்
அன்ன மாட்சி அனையராகித் - தமக்கெனமுயலா
நோன்றுட் பிறர்க்கென முயலுநல்லுண்மையானே.

எனச் சாவா மருந்தையும் தனியாய் உண்ணுத தகை மையில் தொடங்கிய பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தன் மை – சினங்காத்து இனத்துடன் வாழும் பான்மை. அஞ்சி அஞ்சிச் சாகும் அவல நிலையை ஒழித்த மறக்குடி வீரம். பிறர் பழிப்பிற்கு இடமளிக்காது புகழ் என்றால் உயிரையும் கொடுக்கும் செம்மை, பழியெனில் உலகமே தன்னைச் சார் வதாயிருந்தாலும் இச்சை கூடக் கொள்ளாத பெருமை — இவற்றில் சோர்வற்ற உறுதியுடன் தன்னலமின்றித் தரணி வாழப் பிறர் நலக் கருத்தில் உருத்தாய் விளங்கிட முயற்சி மிக்குடைய நல்ல உண்மையாளர்கள் வாழ்கின்றுர்கள், அதனுல் உலகம் இன்றுவரை அழிவின்றி வளர்ச்சியுடன் வாழ்கின்றது.

புத்தக விரிவிலும், வித்தக உயர்விலும், எத்தக நன்மையிலும் நாளும் சிறந்து வாழத் தனிமனிதர் ஒவ்வொருவரும் தள்ளரிய நீதி தனியாறுபுக மண்டும் பள்ள மென்னும் ஆழியாம் எண்ணரிய சமுதாயம் ஏற்றமுடன் இயங்க வழிகோலி — உண்மை உறுதி என்னும் அடிக்கல் நாட்டுவோம் இதயத்தில் ஆன்ம பரமாத்ம, உண்மை அறிவும், பேரறிவும், அன்பும் — எல்லாம் இதிலேதான் அடக்கம். இதய ஊக்கமே இளைஞர் நாட்டம். ஏற்றமுள்ள இளைஞர் இதயம் ஒன்றுபட்டால் உண்டு உயர்வாழ்வு. அதில் விண்டு விட்டால் — விரித்துச்சொல்லத் தேவையில்லை மாற்றமும் கூற்றமும் அதுவே ஒரு சேர வாருஞ் செகத்தீரே.

உண்டியும், உடையும், உறையுளும் யாவர்க்கும் பகிர்ந்தளித்து ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன் வாழ வழி செய்வது சான்றோர் கடமை.

நாடாகொன்றோ! காடாகொன்றோ!
அவலாகொன்றோ! மிசையாகொன்றோ!
எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
நல்லை வாழிய நிலனே!

நாடு நல்லதா? காடு நல்லதா? பள்ளம் நல்லதா, மேடு நல்லதா? எல்லாம் நல்லதே - காடும் செழிப்பாய் நாடும் நாடும் (விரும்பும்) நாடாய்; பள்ளத்தாக்கும் வளமுற்றதாய்; பீடபூமியும் பெருமை பெறத் தக்கதாய் அமைவது அங்கு வாழ்கின்ற மக்கள் பண்பின் உயர்வே எனக்கூறி, உயர் சமுதாயம் வாழச் சமயமும், அதனை வாழ்வாகக் கொண்ட மடங்களும் மடாதிபதிகளும் நன்கு உதவி எவ்வழியும் மக்கட் பெருங் கூட்டம் மாட்சியுடன் காட்சியளிக்கச் செய்ய வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டு முடிக்கின்றேன்.

★★

# இந்து சமயமும் டார்வின் தத்துவமும்

- அருள்சத்தியநாதன் -

## டார்வின்:-

உலகசரித்திரத்திலே, மத்தியகாலம் என வழங்கப்படும் நூற்றுண்டுகளுக்கு முன்பு, கத்தோலிக்க மதபீடம் அமைந்திருந்த ரோமையில், சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த பாப்பரசர்களின் பிடிக்குள், கத்தோலிக்க நாடுகள் சிக்கி, அவர்களுக்கு அடிபணிந்து நடந்து வந்தன, எனக்காண்கிறோம். அப்போது பாப்பரசர்கள், சமயத்தின் பெயரால் தமக்கிருந்த அதிகாரங்களைக் கொண்டு, கிறிஸ்தவர்களை ஆட்டிப்படைத்து வந்தனர். இதனல், முற்போக்கான பேச்சு, எழுத்து, சிந்தனை, சுதந்திரங்களை இழந்தவர்களாய், அம் மக்கள் மூளை மழுங்கிய நிலையில் இருந்து வந்தனர். அவர்கள் எதையுமே, சமயத்தின் கண்கொண்டு பார்ப்பவர்களாகவும், கத்தோலிக்க சமயத் தலைவர்களின் முடிவுகளையே இறுதி முடிவுகளாகக் கொள்பவர்களாகவும் இருந்தார்கள். தப்பித் தவறி, சமயத்திற்கு மாறுக சிந்திப்பவர்கள், கொடூரமான முறையில் நசுக்கப்பட்டார்கள்.

இது 15ம் நூற்றுண்டுக்கு முந்திய காலம்

ஆனல், 15ம் நூற்றுண்டுக்குப் பின், மறுமலர்ச்சி யுகம் தொடங்கியதும், கல்வி விருத்தியின் பயனுக, பல்வேறு துறைகளில் அறிஞர்கள், சிந்தனையாளர்கள் தோன்றினுர்கள். அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதன் பயனுக, உரோம, கிரேக்க, ஆங்கில இலக்கியங்கள், அறிவியல் நூல்கள் எல்லோர்க்கும் கிடைக்கத் தொடங்கின. இதனுல், சமயத்தின் பெயரால் மனிதனுக்கும் அறிவிற்கும் இடையில் போடப்பட்டிருந்த இரும்புத் திரை, தகர்த்தெறியப்பட்டது. சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. மக்கள், எதையு

மே [illegible] கண்கொண்டு நோக்காமல், அறிவுக் கண் கொண்டு நோக்கத் தலைப்பட்டனர்.

இதன் பின், சுதந்திரமான சிந்தனையாளர்கள் வரிசையில், கிறிஸ்தவர்களையும், முழு உலகையும் ஆச்சரியத்திலும் திகிலிலும் ஆழ்த்திய டார்வின் தோன்றினார். 'கடவுள் உலகைப் படைத்தார். அங்கே ஆதாமையும், ஏவாளையும் (கிறிஸ்தவ மதப்படி, உலகின் முதல் ஆண் பெண்ணின் பெயர்) உருவாக்கினார்' என்று அதுவரை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருந்த கிறிஸ்துவ உலகம், அதன் பின், டார்வின் சொல்லும் படியும் இருக்கலாமல்லவா? என்று சிந்திக்கத் தலைப்பட்டது. உண்மையாகச் சொல்லப் போனால் 'மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான்' என்ற டார்வினின் கொள்கை, சமயத்துறையில் ,மாத்திரமல்ல முழு உலகிலும் ஒரு விழிப்பை ஏற்படுத்தியது.

## டார்வின் தத்துவம்:-

உலகத்தைக் கடவுள் 'படைத்தி'ருக்கமுடியாது என்று இத்தத்துவம் பேசுகிறது. இயற்கையின் விளைவுகளால் பிரபஞ்சங்களும் உலகமும் தோன்றியிருக்கின்றன என்பது இதன் முடிவு.

சூரியனிலிருந்து பிரிந்த உலகம், மழை, எரிமலைகளின் உஷ்ணம்காரணமாக, பல வி த மா ன மாறுபாடுகளுடன் குளிர்ச்சியடைய ஆரம்பித்தது. இன்றும் தணியாது, பொங்கிக் கொண்டிருக்கும் பூமியின் அடிப்பகுதியிலுள்ள, அந்த உஷ்ணம், உலகின் மேற்பரப்பைவிட்டு அகன்றதும் மலைகளும் கடலும் தோன்றின. அதன்பின், முதன் முதலாவதாக கடலில் உயிர் அணு ஒன்று தோன்றியது. அதன் பின் படிப்படியாக பரிணாமம் பெற்று, இலட்சக்கணக்கான வருடங்களின் பின் குரங்காக, மனிதனாக, அந்த உயிர் அணு வடிவம் பெற்றது. இதுதான் டார்வினிஸம் (Darwinism) எனப்படும் கொள்கையின் அடிப்படை. இக்

கொள்கை, இன்றளவும், விஞ்ஞானிகள், உயிரியல் வல்லுநர்கள், பேராசிரியர்கள், மருத்துவ நிபுணர்கள் ஆகியோரினுல் பாகம் பாகமாக ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டு வருகிறது. இப்புதிய கொள்கை, பல சமயங்களின் உலகப் படைப்பு நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்துவிட்டது. ஆனல் நவீன விஞ்ஞான கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் அல்லது அவற்றிற்கு தம்மில் இருந்து உதாரணங்களைக் காட்டி, எல்லாக் காலங்களிலும் உலகோடு இணையக்கூடிய பெருஞ் சமயமான இந்து சமயத்தோடு டார்வினிஸத்தின் நிலை என்ன என்று பார்ப்போமானுல், டார்வின் ஒன்றையும் புதிதாகச் சொல்லிவிடவில்லை என்ற முடிவிற்கு வந்துவிடுவோம். ஏனெனில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இந்து தர்மத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதையே, டார்வின் தெரிவித்திருக்கின்ருர்.

## உலகின் தோற்றமும் வேதாந்தமும்:-

எல்லையற்ற பிரபஞ்ச வெளியில் சிதறிக்கிடக்கும் நட்சத்திர மண்டலங்கள், கிரகங்கள், துணைக்கோள்கள், இன்னும் எண்ணற்ற புதிர்மண்டலங்கள் இவை அனைத்தும் ஒரு சக்திக்குக் கட்டுண்டு நிற்கின்றன என்பது, விஞ்ஞான உண்மை. இதனை ஈர்ப்பு சக்தி என்று அழைக்கிருர்கள். இரண்டு கலங்கள் ஒன்றை ஒன்று பிடித்துக்கொள்ள இந்த ஈர்ப்பு சக்தியே உதவுகிறது. இச் சக்திமட்டும் இல்லாமல் போகுமானுல், பொருட்களின் தோற்றங்கள் அழிந்து போகும். எந்த பொருளுக்கும் வடிவம் இல்லாமல், பிரபஞ்சமே தூசிக்கடலாக அண்டவெளியில் மறைந்து போகும். பூமியின் ஆகர்ஷண சக்தி, கிரகங்களின் இழுக்கும் சக்தி, அல்லது, அதற்கு எதிரிடையான விலக்கும் சக்தி, உஷ்ணம் மின்சாரம், காந்தம் இவை அனைத்தும் அந்த பொதுவான சக்தியின் வித்தியாசமான தோற்றங்களே. விஞ்ஞானத்தால் சமீபத்தில் உணரப்பட்ட இச் சக்தி, பழைய இந்து நூல்களிலே, பிராணன் என்ற பெயரில் பேசப்படுகிறது. பிராணனை ஒரு வேகம் அல்லது அலை (Vibration) என்று

சொல்லலாம். ஆதி பிராணனின் அடுத்த நிலையே பிராணன்.

இருவர் பகை கொள்வதற்கும், நட்பு பாராட்டுவதற்கும் இந்த பிராணனே காரணம். நவீன விஞ்ஞானத்தின் படி, ஒரு மனிதனின் உடலைச் சுற்றி, மின் அலை சூழ்ந்துள்ளது. ஒருவனது குணத்திற்கு ஏற்ப, வெளியே பாயும் அலைகளில் மாற்றம் ஏற்படும். மாறுபட்ட மின் அலைகள் சேரும் போது அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கின்றனர். நெருங்கிய சினேகிதர்கள் பொதுவாக ஒரேமாதிரியான குணவியல்புகளைக் கொண்டிருப்பர் உடல் வெளியிடும் இந்த மின் அலையே பிராணன் என்று குறிக்கப்படுகின்றது. இதன் மூலம், உலகின் ஒவ்வொரு பொருளுக்கும் பிராண சக்தியே ஆதாரம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இனி, வேதாந்தத்தில், உலகின் தோற்றம் முடிவு எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதை நோக்கலாம். பிரபஞ்சம், அதன் முடிவுகாலம் வந்ததும் அடங்கத் தொடங்குகிறது. முதலில், பொருட்களுக்கும், வடிவங்களுக்கும் ஆதாரமாயுள்ள பிராண சக்தி, ஆதிப்பிராணனுடன் (பிரம்மம்) அடங்குகிறது பிராணனை இழந்த பிரபஞ்சம் தூசிக் கடலாக ஆகாயத்தில் மறைந்துவிடும். இவ்வாறு சிருஷ்டியின் முடிவு நடைபெறுகிறது. பின் சிருஷ்டி காலம் தொடங்கியதும் அடங்கியிருந்த பிராணன் ஆகாயத்துடன் மோதும். ஆகாயத்துடன் சேர்ந்ததும், சிதறிக்கிடக்கும் இரும்புத் தூள், காந்தத்தைக் கண்டதும் எவ்விதம் ஒன்றுகின்றதோ, அதுபோல ஸ்தூல வஸ்துகள் அலை அலையாக தோற்றம் எய்துகின்றன. சூரிய சந்திரர்கள், பிரபஞ்சங்கள் மீண்டும் தோன்றுகின்றன.

இந்து சமயத்திலே இவ்வாறு உலக முடிவு, ஆரம்பம் ஆகியன பேசப் படுகின்றன. இவ்வாறு உருவாகும் போது ஒரு கிரகத்தில் இருந்து இன்னொரு கிரகம் தோன்றலாம். அதில் ஆட்சேபனை இல்லை. அதன் பிரகாரம், நப் ... மி

சூரியனில் இருந்து பிரிந்த ஒன்று என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளலாம். பிராண சக்தி நிறைந்த உலகிலே, உயிர அணுக்கள் தோன்றி படிப்படியாக பரிணும வளர்ச்சி அடைந்து மனிதனுக உச்ச நிலையை அடைகிறது என்ற கொள்கையை தள்ளி விடுவதற்கில்லை. ஆகவே, டார்வினின் உலக தோற்றக் கொள்கை, இந்து தர்மத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தவருன கருத்தாகத் தெரியவில்லை.

## மனிதனின் பிறப்பும் பரிணும வளர்ச்சியும்:-

இத்தோடு உலகின் தோற்றக் கொள்கை, பற்றிய ஆராய்ச்சிகளை விட்டுவிட்டு, மனிதனின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு வருவோம். ஆறடி உயரமும், ஆஜானுபாகான தோற்றத்தை உடைய ஒரு மனிதனின் ஆரம்பம் எப்படியானது என்ருல், விந்து எனப்படும் கண்ணுக்குத் தெரியாத உயிர் அணு ஒன்றே காரணமாக அமைகிறது. இங்கு, டார்வின் உயிர் அணுக் கொள்கையைக் காணும் நாம், அத்தோடு இயற்கையின் எல்லையற்ற அற்புத சக்தியையும் உணர்கிருேம்.

அரும் பெரும் காரியங்களை ஆற்றும் மனிதன், அவனது தொடக்க நிலையில், கண்ணுக்குத் தெரியாத அணு ஒன்ருகவே, தாயின் கருப்பையினுள் அமர்கிருன். விந்தாக கருப்பையினுள் நுழையும்மனிதன், பத்து மாதங்களின் பின் ஏராளமான அணுக்களின் சேர்க்கையால் பிராண சக்தியின் உதவியோடு ஒரு குழந்தை வடிவமாக வெளியேறுகிருன். இது விஞ்ஞானக் கண்டு பிடிப்பு. இது டார்வின் உலகின் தோற்றக் கொள்கைக்கு நல்ல ஆதாரமாக அமைகிறது. எவ்வாறு ஒரு உயிரணு குழந்தையாக—மனிதனுக—ஆறறிவு பெற்றதாக மாறுகிறதோ, அதே போலவே உலகின் ஆரம்பத்தில் கடலில் தோன்றிய உயிரணு படிப்படியாக வளர்ந்து மனிதனுனது.

இவ்வாறு நாம் ஆராயப் புகும் போது, பொருள் நிறைந்த ஒரு கேள்வி எழுகிறது. தெய்விகமும் சகல சக்தி

களும் நிறைந்த மனமும், பிராணனும் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் மூளையும் எவ்வாறு அந்தக் கண்ணுக்குத் தெரியாதஅணுவினுள் அமைய முடியும்?என்பதே அவ்வினா.

விஞ்ஞானத்திற்குளத்துறையிலுமேஓரளவுதான் புகுந்து பார்க்க முடியும். மெய்ஞானம் ஒன்றே, எவ்விஷயத்தையும் அக்கு வேறு ஆணிவேருகக் கழற்றிப் பார்க்கக் கூடியது. மேலே கேட்கப்பட்ட கேள்வி வரை துணை வந்த விஞ்ஞானம் அத்தோடு நிற்க, அதன் பின் மெய்ஞானமே இறுதி வரை எம்முடன் ஒளி விளக்காக வருகிறது.

பிறப்பைப் பற்றி புத்த தர்மம் பேசுகையில், ஒருவனது முன் வினையின் காரணமாக அவனது இரண்டாவது பிறப்பு நடக்கிறது என்றும், அப்பிறப்பின் பிரகாரம் அவனது அடுத்த பிறப்பு அமைகிறது என்றும், ஆன்மா புத்த நிலையை அடையும் வரை இப் பிறப்புக்கள் அவ்வான்மாவுக்கு அமைகின்றன என்றும் சொல்கிறது. சித்தார்த்தன் புத்தனைது போல ஆன்மா பிரம்மமாகும் வரை அது பிறவிகளை தொடர்ந்து பெறுகிறது. இவ்வாறு பிறவிகளைப் பெறும் ஆன்மா, தன் அடுத்த பிறவியின் தகைமைக்கு ஏற்ப சூழ்நிலைகள் கூடிய இடத்தில், உயிரணுவோடு ஒன்ருகக் கலந்து கருப்பையினுள் அமர்கிறது. உடனே அந்த உயிரணு சகல தகமைகளும் கூடிய – தெய்விகம் பொருந்தியதாக ஆகிவிடுகிறது. ஆனுலும், முதல் பிறப்பில் அடைந்த பலாபலன்களின் படியே அதன் ஞானம், வைராக்கியம், அறிவு ஆகியவற்றைப் பெற்றிருக்கும். இதனுல், கண்ணுக்குத் தெரியாத விந்துவினுள், சகல சக்திகளும் பெற்ற மதத்தின் கூருன மனம் (மனங்களின் சேர்க்கை மகத் என வழங்கப்படும்), பிராணன் ஆகியவை ஆரம்பத்திலேயே அமைந்து விடுகிறது என்பதை நாம் அறிந்துகொள்கிரேம்.

பத்து மாதங்களின் பின் குழந்தை வடிவில் வெளியேறும் ஆன்மா முற்பிறவியின் பலன்களின்படி நடக்கத் தொடங்குகிறது என்ருலும், மேலே கறைகளும் மாசுக்களும்

பெற்று, உள்ளே தெய்விகம் பொருந்திய அதன் ஆன்மா, பிரம்மத்தை நோக்கி பீறிட்டுப் பாய்கிறது. எந்த மனிதனின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும், அவனது இயல்பான குணத்திற்கு மாறுபட்டதான சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கக் காண்போம். தன் சுயரூபத்தை வெளிக் கொண்டுவரும் ஆன்மாவின் செயலே இது. ஆன்மாவின் இச் செயலாலேயே, மனிதர்கள் கடவுள் பால், சக்தியின் பால், அல்லது நேர்மையின் பால், ஈர்க்கப்படுகிறுர்கள். அந்தப் பிறவியில் ஆன்மாவின் இலட்சியம் கூடாமல் போனுல், அந்தப் பிறவியின் பலன்களின்படி அடுத்த பிறவியை பெறுகிறது. அந்தப் பிறவியில் அறிவு விசாலம் பெற்று அந்தப் பிறவியின் போதே பிரம்மமாக முயற்சிக்கிறது.

## பரிணும வளர்ச்சியின் முடிவு:-

ஒரு பிறப்பின் பிரகாரம் அடுத்த பிறவியை ஒரு ஆன்மா அடைகிறது என்று பார்த்த நாம், அதன் முடிவில் ஒரு விஞவைச் சந்திக்கிறேம். ஒரு பிறவியின்படி அடுத்த பிறவி என எண்ணற்ற பிறவிகளைப் பெறும் ஆன்மாவுக்கு முதல் பிறவி எது? அப்பிறவியில் அதன் நிலை என்ன? என்பதே அந்த சிக்கலான விஞ?

பிரஹலாதன், தன் தந்தை இரணியனிடம் 'இறைவன் தூணிலும் துரும்பிலும் உறைகின்றுன்' என்று, மொழிவதாக, புராணத்திலே காண்கிறேம். இது வெறும் வார்த்தை அல்ல. மிக உண்மை நிரம்பிய வார்த்தை ஆகும். இறைவன் தூணிலும் துரும்பிலும் இருக்கிறுன் என்ற வாக்கியம், 'தானே உலகாகி, தன்னுள் தன்னை அடக்கியவன்' என்ற தத்துவத்தை விளக்குவதாக இருக்கிறது. இவ்வாறு, எங்குமுள்ள இறைவனுக்கும், மனிதனின் ஆன்மாவுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது, அதாவது, தூசு, புல் பூண்டு வடிவிலிருக்கும் ஆன்மாவும், மனித ஆன்மாவும் ஒன்றே என்பதே அது!

உலகின் தோற்றக்காலத்தில், உயிரணுக்களாக விளங்கிய கலங்கள் எவ்விதம் மனித வடிவம் பெற்றதோ, ஆரம்பத்தில் கண்ணுக்குத் தெரியாத விந்தாக இருந்த உயிரணு பின்னல் எவ்வாறு மலர்ச்சி அடைகிறதோ, அவ்வாறே மனித வடிவைப்பெறும் ஆன்மாவும், முதலில் மிகத்தாழ்ந்த உயிரினமொன்ருகவே, பிறப்பு அடைகிறது. டார்வினிஸத்தின் படி. மிகக்கீழான உயிரினத்தின் வளர்ச்சி நிலையே மனிதன். சமயத்தின்படி. மிகத்தாழ்ந்த உயிரினத்திலுள்ள ஆன்மாவின் கூடிய மலர்ச்சி நிலையே, மனிதனின் ஆன்மா. ஒரு ஆன்மா, ஒரு சிறு உயிரணுவாக முதலில் பிறப்பு எடுத்து பின் படிப்படியாக ஸ்தூல நிலையிலும் சூட்சும நிலையிலும், பரிணமம் அடைந்து, இறுதியில் உயர்ந்த ஸ்தூல நிலையும், உயர்ந்த அறிவாம் ஆறும் அறிவைப்பெற்று, இறைவனுக்கு அடுத்த நிலையும், அவனையடைய வழியுமான மானிட பிறவியை அடைகிறது. இதனல்தான், 'அதி உயர்ந்த பிறவி, கிடைப்பதற்கு அரிய பிறவி, மானிடப் பிறவி' என பெரியவர்கள் உரைத்திருக்கிருர்கள். இனி இந்த ஆன்மா எதற்காக அப்படி பல பிறவிகளை பெறுகிறது. என்றும், இதனுலான நன்மை பற்றியும் பார்ப்போம்.

ஒவ்வொருபொருளுக்கும், அதனதன் நிலையிலே, ஒரு ஆக உயர்ந்த தன்மை உண்டு. ஒவ்வொரு பொருளும் அதனதன் குணத்திலே, செய்கையிலே நிறைவுபெறுகிறது. ஒரு மரத்தை எடுத்துக்கொண்டால், அது வளர்ந்து, பூக்களைச் சொரிந்து, கனிகளைத்தந்து, தனக்குப்பின் சந்ததிகளையும் ஏற்படுத்தி, இறுதியில் விறகுகளாகவோ, மரச்சாமான்களாகவோ பயன்தந்து மடிய வேண்டும். இதுவே அதன் நிலையில், நிறைவு. ஆக உயர்ந்த தன்மை. மனிதன் தனக்கு அளிக்கப்பட்ட அறிவைக் கொண்டு பிறர்க்கு தன்னலமற்ற சேவை செய்து, பற்றற்ற முறையில் கடமையை செய்து, உலகிற்கு நன்மையான வகையில் இறுதிவரை வாழ்ந்து, தன்னையறிவதின் மூலம் பிரம்மத்தை அடைய வேண்டும். இதுவே மனிதனின் நிறைவு. இலட்சியம்.

இவ்வாறு ஒவ்வொரு பொருளுக்கும் இலட்சியம் உண்டு. தூசியாக பிறவி எடுத்த ஆன்மா, அதன் நிலேயில் மலர்ச்சி அடைந்து, அதற்கு அடுத்த — உயர்ந்த — பிறவியை அடைகிறது. இவ்வாறு, புல், பூண்டு, கல், மண் என ஒவ்வொரு வடிவிலும் உறைகின்ற ஆத்மா, எண்ணற்ற பிறவிகளே பெறுகிறது. ஒவ்வொரு நிலேயிலும் அது ஓரளவு மலர்ச்சி அடைகிறது. ஞானம் அடைகிறது. மனித பிறவியைப் பெறுவதற்கான தகுதியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறுகிறது. பத்து வகுப்புகளில் தேருமல் ஒரு மாணவனுக்கு அரசாங்க தேர்வு எழுத இயலாதல்லவா; உலகம் ஆன்மாக்களால் நிறைந்துள்ளதால் தான் இன்னெரு பொருளுக்கு தீங்கு நேர்தல் தவிர்க்கப் பட வேண்டும் என்ற அஹிம்சைக் கொள்கையைத் தன் அடிப்படையாக புத்த தர்மம் ஏற்றது. தெய்விகம் எங்கு தான் இல்லே! மலர்த் தோட்டங்களிலே, ரம்மியமான இயற்கையின் தோற்றங்களிலே, மழலேச் சிரிப்பினிலே தெய்விகம் மலர்கிறதே! ''எப்பொருள் சிறப்போடும்,பொலிவோடும்,வலிமையோடும் விளங்குகிறதோ! அப்பொருள் என்னுடைய பேரொளியினின்று தெறித்த ஓர் ஒளிச் சிதறலே என்பதை அறிவாய்'' என்று கிருஷ்ணபகவான் உரைக்கிருர். ஒரு நாய்க்குட்டியின் கண்களே ஆழ்ந்து பார்ப்போமாளுல், கள்ளமற்ற, குழந்தைத்தனமான வசீகரிக்கும் அதன் கண்களிலே தெய்விகத்தைக் காண்போம்.

டார்வின் தத்துவப் படி, மனிதனே உயர்ந்த வளர்ச்சி நிலே. ஆன்மாவுக்கும், பிறவிகளிலேயே இறுதியான பிறவி மானிடப் பிறவியே. ஸ்தூல நிலேயில் இறுதியான நிலேயான மனிதப் பிறவியோடு டார்வினிஸம் நிற்க, சூட்சும நிலேயில் அது தொடர்கிறது. மனிதப் பிறவிக்கு மேல் இன்னுேர் நிலேயை அது அடைய வேண்டும். மனிதன் அமரனுதலே அது. குணங்களேயுடைய சகுண பிரம்மம் குணங்களே அற்ற நிர்க்குண பிரம்மனுதலே பரிணுமத் தத்துவத்தின் (Theory of Transformation) இறுதியும், அதி உயர்ந்ததுமான நிலே.

இத்துடன், ஒரு ஆன்மாவின் மிக நீண்ட பயணம் முற்றுப் பெறுகிறது.

இங்கு ஓர் விடயமொன்றைக் கவனிக்க வேண்டும் நம் புராணங்களிலே, ரிஷிகள், சித்தர்கள் நினைத்த போது பல வடிவங்களை எடுக்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என்று காண்கிறோம். பற்றற்ற ஆன்மா, விழிப்படைந்த ஆன்மா, தான் முன்பு எடுத்திருந்த பிறவிகளின் நிறைவினால், மீண்டும் அந்த வடிவத்தை எடுக்கலாம்.

## மனிதனும் சொர்க்கமும்:-

பொதுவாக எல்லா மதத்தினரும், இறப்பிற்குப் பின் சொர்க்கம் என்ற இஸ்தலம் இருப்பதாகவும், தூயவர்கள் அங்கே மகிழ்ந்திருப்பார்கள் என்றும் நம்புகிறார்கள். தர்க்க ரீதியில் இதனை ஏற்றுக் கொள்ள இயலாது. ஏனெனில் சொர்க்கத்தைப் பெறவேண்டுமானால், இந்திரியங்களை அடக்க வேண்டும்; உலகைத் துறக்க வேண்டும். இதன் பின் கிடைக்கக்கூடிய மோட்சம், புலன்களால் நுகரக் கூடியதாக இருக்க முடியாது. அது மாத்திரமன்று, புலன் களால் நுகரக்கூடியது எதுவுமே நிலையானதாக இருக்க முடியாது. மோட்ச இன்பம் நுகரக் கூடியது என்றால் தெய்விக அநுபவம், கடவுள் அனைத்தும் அழியக்கூடியது என்று பொருள் ஆகிறது. இன்னொன்று, புலன்களைத் துறந்தவன் மோட்ச இன்பத்தையும் அநுபவிக்க விரும்ப மாட்டான். மோட்சம் அல்லது சொர்க்கம் என்ற சொல் லால் கற்பிக்கப்படுவது ஒன்றே. வேதாந்த ஞானத்தில் பாமரர்களான மக்களுக்கு, மரணத்தின் பின் கிடைக்கும் பேரின்பத்தை விளக்குவதற்காக உருவாக்கப் பட்ட உரு வகம் எனக் கொள்ளலாம்.

சொர்க்கத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கப் படுவதைப் போன்றே நரகத்தையும் சமயத் தலைவர்கள் மிகப் பயங் கரமாக சித்தரிக்கிறார்கள். சொர்க்க போகத்தைக் காட்டி

ஒருவனை சமயத்தில் ஈடு பாடு கொள்ளச் செய்வது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறு ஒருவனை நரக வேதனைகளை பயங்கரமாக சித்தரித்து சமயத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்தலும்.

குறிப்பாக கிறிஸ்துவ குருமார்களே இந்த மாதிரியான செயலைச் செய்து வருகிறார்கள் என்று சொல்லலாம். பொதுவாக கிறிஸ்தவர்கள் சமயத்தில் ஈடுபாடு கொண்டிருப்பது நரக நெருப்பிலிருந்து 'தப்பிக்' கொள்வதற்காகத் தான்! நரக வேதனையானாலும் சரி சரி, சொர்க்க இன்பமானாலும் சரி, பயத்தையோ, மகிழ்ச்சியையோ, காட்டி சமய நம்பிக்கைக்கு வழிகாணுவது எக்கோணத்தில் இருந்து நோக்கினாலும் சரியான ஒன்றாகத் தெரியவில்லை. சமயத் துறையிலே காணப்படும் இச் சாபக்கேடு உடனடியாக அகற்றப் பட வேண்டும். சமயத் தத்துவங்களை, உள்ளார்ந்த கொள்கைகளை அதன் உண்மை சொரூபத்தை ஒவ்வொருவனும் உணர வேண்டும். இதுவே சரியான வழி. மக்களை பக்தர்களாக மாற்றுவதற்கு ஒவ்வொருவரும் தன் புத்தியைக் கொண்டு சிந்திக்க வேண்டும். உணர வேண்டும். அங்கே தான் அனுபூதி கிடைக்கும் எல்லா சமய முறைகளும் இதனை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் சமயத்திற்கு ஆட்களைத் தேடுவது சமயமுமன்று, சமயத் தொண்டுமன்று. இருப்பவர்களைச் சரியான நெறியில் ஆண்டவன் பால் உணர்த்தலுடன் அழைத்துச் செல்வதே சமயம் சமயப் பணி.

முதல் பந்தியிலே, இறந்த பின் கிடைக்கும் சொர்க்க இன்பத்தை (பேரின்பம்)ப் பற்றிப் பார்த்தோம். பேரின்ப நிலை என்பது இறந்த பின் மாத்திரம் கிடைக்கக் கூடிய ஒன்றா?

பேரின்பம், மரணத்தின் பின் பெறக் கூடியது என்பது முழு உண்மையாகாது. இந்த பிறவியிலேயே பேரின்பத்தை அடைவதற்கான வழிகளைத் தெளிவாக குறிப்பிடு

வது தான, இந்து தர்மத்திலுள்ள விஷேடம். ஆம், இப் பிறவியிலேயே நிச்சயமாக நாம் 'அது' ஆகலாம் ஆயிரக் கணக்கானவர்கள் இந்து சமயத்திலே எமக்கு சாட்சிகளாக இருக்கிருர்கள். சேவை, தியானம், வழிபாடு, யோகம் ஆகி யவற்றின் மூலம் 'நான்' என்ற தன்மையை அழித்துக் கொண்டவர்கள் அகிலம் முழுவதும் ஆயிரம், ஆயிரம்! பண்டைக் காலத்து ரிஷிகள், இயேசு கிறிஸ்து நாதர், புத்த பகவான், ர ம ண ர், ராமக்கிருஷ்ண பரமஹம்சர், சிவானந்தர், நம் காலத்திலே இதோ கண்முன்னே நட மாடி வரும் பகவான் சத்தியசாயிபாபாஆகியோர் தன்னேடு தாஞனவர்களே! உபநிடதங்கள், இந்து தத்துவ ஞானம் வேதாந்தம் ஆகியவை இந்தப் பிறவியிலேயே ஆத்மாதன் சுயரூபத்தை அடைவதற்கான வழி சொல்லப் பட்டிருக் கிறது.

துவைதம், விசிட்டாத்துவைதம், அத்வைதம் இவற்றுக் கெல்லாம் கீழான வெளி அடையாளங்கள், விக்கிரக வணக்கம் ஆகிய பல வழிகளில் இப்பேரின்ப நிலையை அடைவதற்கு வழி சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு பக்தன் வெளி அடையாளங்கள் என்ற நிலையில் சமய பக்தியை ஆரம்பித்து விக்கிரக ஆராதனே, துவைதம் விசிஸ்டாத்– துவைதம் என்ற முறையில் மேலே சென்று சமயங்களின் முடிவாம் அத்வைத பெரு நிலையை அடைய வேண்டும்.

''எங்கு இயற்கையின் மாறுபாடுகள் அனைத்தும் ஓய் கிறதோ எது எல்லாக் கருத்துக்களுக்கும் மனத்திற்கு எட்டாததாய் இருக்கிறதோ, எது அனைத்தையும் தன்னில் அடக்கி தான் எதற்கும் அடங்காததாய் இருக்கிறதோ, எது எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்குகிறதோ அத்த கைய பூரணத்துவமுடைய பிரம்மம் சமாதியில் ஆழ்ந்திருக் கும் ஞானியின் உள்ளத்தில் பிரகாசிக்கிறது''

''பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பாற்பட்டதாய், எல்லை யற்றதாய், ஒப்பற்றதாய், பிரபஞ்சமனைத்தையும் எல்லா

பாகங்களிலும் மூடியிருக்கும் மகாப் பிர[illegible]றதாய் ஆனால் எந்த விதமான சலனமும் இல்லாமல் பூரண சாந்த முடையதாய், எல்லா விதமான சந்தேகங்களும் சஞ்சலங் களும் இல்லாததாய் இருக்கின்ற அத்தகைய பிரம்மம் சமாதியில் ஆழ்ந்திருக்கும் ஞானியின் இதயத்தில் பிரகாசிக் கிறது''

(இந்திய பிரசங்கம் - சுவாமி விவேகானந்தர் பக். 306-307)

இந்த அநுபவம் வரும் போது உலக உணர்ச்சிமுற்றிலும் மறைந்துவிடும்.

★★

## செய்திச் சுருக்கம்

'ஆனந்த அருளகம்' என்ற பெயருடன் வயோதிப மாதர்களுக்கான 'அனாதை இல்லம்' ஒன்று ஆரம்பிக்கப் பட இருக்கிறது. கொழும்பிலுள்ள ஸ்ரீமதி சிவானந்த தம் பையா அம்மையார் இதற்கான முயற்சிகள் எடுத்துள்ளார். இந்த அனாதை இல்லத்திற்கான அத்திவாரக் கல் நாட்டு விழா மார்ச் மாதம் 18ம் திகதி 1/21, கதிரானபாம், கொழும்பு - 15 என்ற இடத்தில் நடைபெற இருக்கிறது.

ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்களின் ஆசியுடன் பாட்னா மகாராணி ஸ்ரீமதி. கே. கே. தேவி அவர்கள் அத்தி வாரக் கல் நாட்டுவார்.


## இமாலயன் பற்பொடி

ஒரு ரின் விலை ரூபா 1

கிடைக்குமிடம்: ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி

## கூட்டுவழிபாடு

வெளிவந்து விட்டது

(விலை சதம் 50 புதியபதிப்பு)

கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.

# முத்திற வழிபாடு.

நா. சுந்தரமூர்த்தி

மக்கள் செய்யும் பணி இரு கூறுடையது; அவை காமியப் பணி, நிட்காமியப்பணி என்பன. முதலாவது பயன் கருதிச் செய்வது, பின்னது பயன் கருதாதியற்றுவது. நிட்காமியப் பணி புரிந்தோர்இறைத்தன்மையைப் பெற்றவராவர். அவர் செழுமையுற்று ஓங்கி வளர்ந்து இறை நிலை எய்துவர். அப்பெரியாரைக் கடவுளாகவும் வழி படலாம். காமியப் பணி புரிவோர் பல துன்பங்கட்கு ஆளாகி வருந்துவர். அவர் தம் நிலை குலைந்து, கீழ் பட்டுள்ள விலங்கு, புள் முதலிய அஃறிணைப் பொருள் நிலையினை அடையினும் அடைவர்.

நம் முன்னோர் உலகப் போக்கினையுணர்ந்தே உலகத்தை நிட்காமியப்பணி வழி நிறுத்தப் பல முறைகளைக் கோலிச் சென்றனர். அவைகளுள் சிறந்தது, முதன்மையானது, அடிப்படையானது தெய்வ வழிபாடு. காரணம் அருள் வடிவாக உள்ள கடவுள் பணிகளெல்லாம் கைமாறு கருதாதன. அவ்வியல்பையுடைய ஒன்றினை மக்கள் இடையறாது எண்ணுவராானல் அதன் இயல்பு அவர்களிடைப்படியும்; நின்மலராவர்.

நிட்காமியப்பணி வளர்ச்சிக்கெனவே ஏற்பட்டவை தெய்வ வழிபாடுகள். அப்பணியைவளர்க்கும் தெய்வ வழிபாட்டினை மூர்த்தி வழியாகவும், தல வழியாகவும், தீர்த்த வழியாகவும் நிகழ்த்தி நலங்கனிந்த வாழ்க்கை நடத்தினர்; அளித்தனர் நம் பெரியோர்.

கடவுள் நீக்கமறயாண்டும் நிறைந்து நிற்பவர். அவரை வழி படுவதற்கு ஓரிடம் வகுக்கப் படுவதன் நோக்கம்என்னை? மக்கள் மனத்திடை நிட்காமியக் கருமத்தை – பணியை- பதியச்செய்ய வேண்டுமென்பதேயாம்.

மனிதர் எதனோடு பழகுகின்றார்களோ, எதனை அடிக்கடி எண்ணுகின்றனரோ, அதனதன் வண்ணமாந்தன்மையர் மனிதர் தம் மனம் பாசக் கரணங்களில் தோயப்பெற்று வஞ்சம், பொறாமை, லோபம் முதலிய தீக்குண வடிவினராகி, தமது நிலையழிந்து விலங்கு நிலை அடைவதை வலியுறுத்தக் காட்சியளவை ஒன்றே போதும். எனவே, மனத்தைப் பாசகரணங்களில் தோய விடாது அன்பில் தோய விடுத்துக் காண்பனவும், கேட்பனவும் அன்பு மயமாகப் புலனாகவும், ஒலிக்கவும் செய்து கொள்ள வேண்டுமேல் வழி ஆலயப்பணியும் வழிபாடு மேயாம்.

தலம் என்பது திருக்கோயில் உள்ள இடமும் அதன் சூழலும் ஆகும். பழைய காலத்தில் நம் முன்னோர்கள் அந்த இடத்தின் தனிச் சிறப்பால், இழுக்கப் பட்டு மூலகாரணமாகிய இறைவனை அங்கே வழிபாடு செய்தனர். அந்தக் கவர்ச்சி ஓரளவாவது என்ஞான்றும் இருக்குமாதலால் அந்த இடத்தில் பயில்வது,படிவது சிறப்பு. இதுவே தலச்சிறப்பு.

ஒரு தலத்துக்குச் செல்வோர் அங்குள்ள இயற்கையாற்றல் தோய்ந்த அங்குள்ள நீரிலும், அது அங்கே தரும் உணவுப் பொருள்களிலும் மக்கள் குணங்களிலும் இயைந்து அதற்குரிய இயற்கை யாற்றலை அடைகின்றர். இது தீர்த்தச் சிறப்பு.

இடம், நீர் என்னும் இரண்டின் தன்மையிலும் படித்தவர்களுக்கு, அத்தன்மைகளை அப்பொருள்கட்கு ஊட்டிச் செழிப்பித்த அறிவார்ந்த இயற்கையாற்றல் ஒன்றுபுலனாகும். அதுவே இறை எனப்படும்.

பொருள்களின் நிலைகட்கேற்றபடி, இறையாற்றல் அங்கங்கும் வேறு வேறு வகையாய் வீறிட்டு நிற்கும். பசுக்கள் தோறும் கறக்கப்படும்பால்நிறத்தில் ஒன்று போலத் தோன்றினும் உண்மையில் வெண்ணிறப் பசுவின் பால் ஒரு வகையாகவும், கருநிறப் பசுவின் பால் வேறொரு வகையாகவும் ஆற்றலில் வேறுபட்டிருத்தலை அறிகின்றோம்.

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

---

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவுதனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Reistered at the G. P. O. as a Newspaper

# சந்தா நேயர்களின் முக்கிய கவனத்திற்கு!

1. 23-வது ஆண்டுச் சந்தா இம்மாதம் தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்பெறும். ஆதலால் சந்தா நேயர்கள் தமது சந்தாவை உடன் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

2. சந்தா அனுப்புவோரும் விலாசமாற்றம் செய்வோரும் தத்தம் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட விரும்புகின்றோம். அங்ஙனம் குறிப்பிடுவதனால் காரியாலய வேலை இலகுவாகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

3. ஆயுள் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் நூறு ரூபாய் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஆயுள் சந்தாதாரராகச் சேருவதனால் சோதியின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தவர்களாவீர்கள்.

4. தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவினால் சோதியின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,
## நாவலப்பிட்டி, (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 16-2-71.